கடைக் கட்டடங்கள் கட்டுவதற்கு தற்போது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே நான்கு பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதி வேண்டி நான் கோரிக்கை வைத்தது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே நிலுவையிலே இருக்கிறது. அதற்கும் உரிய ஆணைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக்கூடியதுதான். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

93—

உழவர் சந்தை

***772—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் நிறைவேற்ற முன்வந்திருப்பதனால் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. செ. தாமோதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

94—

குளிர்பதனக் கிடங்கு

***1958—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 25]

கிணத்துக்கடவு விவசாயிகள் சந்தைக்குக் கொண்டு வருகின்ற காய்கனிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் தனியார் நிறுவனங்கள் முன்வந்தால் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு அனுமதி வழங்கும்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவுப் பகுதியிலே குறைவாகத் தண்ணீர் இருப்பதனால், அதை வைத்து விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலையில், இன்றைக்கு அங்கே தக்காளி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அந்தத் தக்காளியை கிணத்துக்கடவு சந்தையிலே கொண்டுவந்து விற்கும்போது, சில நேரங்களில், விலை அதிகமாக இருக்கிறது; சில நேரங்களில் விலை குறைவு ஏற்படுகிறது. அதனால், விவசாயிகளுக்கு தக்காளியினால் நட்டம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு மேல் அந்தத் தக்காளியை வைத்திருக்க முடியாது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தத் தக்காளியைப் பாதுகாக்கின்ற வகையிலே, விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கின்ற வகையிலே, அங்கே ஒரு குளிர்சாதனக் கிட்டங்கி அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை, விருதுநகர், தலைவாசல், வேலூர், சின்னமனூர், விளாத்திகுளம், திருச்சி, வத்தலக்குண்டு மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய 9 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தனியார்மூலம் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் முன்வருவார்களேயானால், அரசின் சார்பில், மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி, 25 சதவீதம் மானியத்தில் தனியார் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அந்தப் பகுதியிலே தனியார் யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு

கோரிக்கை. கிணத்துக்கடவிலே மார்க்கெட்டிங் கமிட்டியினுடைய கிட்டங்கி பெரியதாக உள்ளது. அது தற்போது எந்தவகையிலுமே விவசாயிகளுக்குப் பயன்படுவதாகத் தெரியவில்லை. எந்தப் பொருளையும் அங்கே கொண்டு வந்து வைப்பதில்லை. அதனால், அந்த இடத்திலே அரசு குளிர்சாதன வசதி செய்துகொடுத்தால், விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதையாவது அமைச்சர் அவர்கள் வருகின்ற காலக்கட்டங்களிலே பரிசீலனை செய்து, அங்கே அமைத்துக்கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு கட்டட அமைப்பு, பிறகு அதற்கு குளிர் சாதனங்கள் இவையெல்லாம் வாங்கி வைப்பதற்கு, கட்டட வடிவமைப்பே தனி. அதை வேறு விதத்திலே அமைக்க வேண்டும். இப்போது இருக்கிற godown, அதைப் பயன்படுத்தி, குளிர்பதனக் கிடங்கு அமைக்க இயலாது. இருந்தாலும், உறுப்பினர் சொல்வதை துறையின்மூலம் கேட்டறிந்து, முடியுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு border–ஆக, எல்லையாக காவல்கிணறுவிளக்கு என்ற பகுதியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் ஒரு காய்கனிகள் market இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம், திருவனந்தபுரம் வரை மிக அதிகமான காய்கனிகள் இந்தப் பகுதியிலிருந்துதான்—கத்தரிக்காய், மிளகாய், தக்காளி போன்ற பொருள்களெல்லாம் இங்கிருந்துதான் செல்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கு மத்திய அரசு 25 சதவீதம் மானியம் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று மாநில அரசும் ஒரு 25 சதவீதம் மானியம் வழங்கினால்—பெருந்தலைவர் காமராஜர் காய்கனிகள் market–ஐ நடத்தி வருகின்றவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து நடத்தி வருகிறார்கள்—அவர்கள் 50 சதவீதம் போட்டு ஒரு குளிர்சாதனக் கிடங்கு அமைக்க விருப்பம் தெரிவித்தால், இந்த அரசு கட்டிக் கொடுக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் விவசாயிகளுக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்பது இந்தக் கேள்வி. அவர் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்றுவிட்டார். ஆனால், ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமானால், இப்போது தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின்மூலம்தான் பெரும்பாலும் நிதியினை நாம் ஒதுக்கி, மத்திய சர்க்காரினுடைய அந்த 25 சதவீத மானியத்தையும் பெற்று அமைக்கின்றோம். நடப்பாண்டில் நிறைய இடங்களுக்கு குளிர் பதனக் கிடங்கு அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கோரிக்கையை வேண்டுமானால் அடுத்த நிதி ஆண்டில் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவும் பொள்ளாச்சியும் ஒரே வட்டத்திலே உள்ளன. பொள்ளாச்சியிலேதான் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய சந்தை உள்ளது. குறிப்பாக காய்கனிகள் உற்பத்தியிலே தமிழகத்திலேயே முன்னிலை வகிக்கின்ற பகுதி பொள்ளாச்சி பகுதியாகும். தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் கொத்தமல்லி போன்ற பச்சைக் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிற அந்த பொள்ளாச்சி பகுதியில் கிணத்துக்கடவுக்குமாகச் சேர்த்து, மிகப் பெரிய அளவில், அரசின் சார்பில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: தற்போது உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

95—

புதிய பேருந்துகள்

*50— **திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—